

சுற்றுலாத் துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தலைமையில் நேற்று (16.10.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வ. தட்சிணாமூர்த்தி, டி. அன்பழகன், எஸ். அருண்ராஜ், பி. பாலமுருகன், திருமதி டி. ரமணிதேவி, திருமதி வி. மாலதி, கூட்டுறவு / பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் கூட்டுறவு /பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் துறைத் தலைமை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று (16.10.2025) சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தின் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரியும் 3,288 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்கிடும் வகையில் 18 பணியாளர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி

# சின்னையன் சத்திரத்தில் சுகாதார நிலையம் அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் காஞ்சிபுரம் – சி.வி.எம்.பி. எழிலரசன் கோரிக்கை!



**சென்னை, அக்.17– சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது காஞ்சிபுரம் தொகுதி உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:–**

**சி.வி.எம்.பி. எழிலரசன்:** 'மக்களைத் தேடி மருத்துவம்', 'நம்மைக் காக்கும் 48', 'நலன் காக்கும் ஸ்டாலின்" என மக்களிடம் இன்றைக்கு மருத்துவம் பல புரட்சிகளைச் செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த நல்லாட்சியில், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட சின்னையன் சத்திரம் என்ற பகுதியில் சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா?. ஏற்கனவே ராஜகுளத்தில் இயங்கி வருகின்ற துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும் அரசு முன்வருமா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** "இந்த அரசு அமையப் பெற்ற பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பொது சுகாதாரத் துறைக்கு மட்டும் 1,274 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஏறத்தாழ 1,500 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டங்கள், துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை தொடர்ச்சியாக திறந்து வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 600க்கும் மேற்பட்ட புதிய துணை சுகாதார நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. அவற்றில் ஒன்றினை மன்ற உறுப்பினர் எழிலரசன் கோரிய இடத்தில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ரிப்பன் கட்டட வளாகத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு

# சென்னை மாநகராட்சியில் 26 புதிய வாகனங்கள்!

## மேயர் பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.17- மேயர் திருமதி ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலை பராமரிப்புப் பணிகளுக்காக 21 மின்கல வாகனங்கள் மற்றும் நாய்களைப் பிடிக்கும் 5 வாகனங்கள் என 26 புதிய வாகனங்களின் பயன்பாட்டினை நேற்று (16.10.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பராமரிப்புப் பணிகளை சாலைப்பணியாளர்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, IDBI வங்கி மற்றும் எக்விட்டாஸ் வங்கியின் சார்பில் பெருநிறுவன சமூகப் பங்களிப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்ட 21 மின்கல வாகனங்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக 23 எண்ணிக்கையில் நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களைப் பிடித்து வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப் படுத்திடும் வகையில், மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் தலா ரூ.10.43 இலட்சம் என மொத்தம் ரூ.52.17 இலட்சம் மதிப்பீட்டிலான 5 நாய் பிடிக்கும் வாகனங்கள் நேற்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, துணை ஆணையாளர் (வருவாய் மற்றும் நிதி) பிரதிவிராஜ், நிலைக் குழுத் தலைவர்கள் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), திருமதி சர்ப ஜெயாதாஸ் (வரி விதிப்பு (ம) நிதி), த.விஸ்வநாதன் (கல்வி), ஐடிபிஐ வங்கியின் மண்டல தலைமை பொது மேலாளர் மஞ்சுநாத் பாய், ஈக்விடாஸ் சிறு நிதி வங்கியின் துணைத் தலைவர் டி.அஞ்சான், மண்டல மேலாளர் யு. கமல்நாத் மற்றும் மாநகராட்சி தலைமைப் பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் சிறப்புரை! திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில்

# பாக ஒருங்கிணைப்பாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கே.பி.சங்கர், எஸ். மோகன் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை, அக்.17- சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில்பாகருங்கிணைப்பாளர்கள், BLA&2, BLC, BDA, BYA ஆலோசனைக் கூட்டம் 13.10.2025 அன்று மாலை 6:00 மணியளவில் திருவொற்றியூர் அஜாக்ஸ் வி. கே. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்று எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA & 2, BLC, BDA, BYA அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார். தொடர்ந்து வாக்குசாவடி பாக முகவர்களுக்கான குறிப்பேடு புத்தகங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்று உரையாற்றினார்.

இதில் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான தி. நகர். எஸ். மோகன், வி. இராமநாதன், ஜி. சந்திரபோஸ், இ. குமரவேல், யு. எஸ். குறளரசன், ஏ. இந்துமதி, எம் . வஜ்ரவேல், மு. சிவக்குமார் எம்.சி,டி. சேகர் எக்ஸ். எம். சி, பி. தமிழரசன் (எ) தம்பியா எம்.சி, கே.பவுல், கே.பி. சொக்கலிங்கம் எம். சி, கி. கண்ணன், ஆர்.தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், ந. ராம்குமார், பொன். கோ. விஜயன், எஸ். கணேஷ், எஸ். ஆர். மலைராஜ், ஆர்.டி. மதன்குமார், வீ.தியாக ராஜன், ஆர்.மோகனசுந்தரம், டி. தேசிங், எஸ். டி. சங்கர், ஆர்.நவகுமார், தழவை எஸ். ரஞ்சித், டி. சக்கரவர்த்தி, லிவிங்ஸ்டன் ராஜ்குமார், சோபனா சுரேஷ் , ஜி. ஹரிஹரன், மாவட்ட சமூக வலைதள பொறுப்பாளர் (மகளிர் ) எஸ். தாமரை எஸ்.சேது, வி. கே. ஏழுமலை, வை. சின்னையன், கே. பாலு, மு .கார்த்திக், கே.செந்தில் குமார், க. சோழன், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ராஜேஷ், ஸ்ரீ சரவணன், ஆர்.நரேன்குமார் எம். ராமு, மு. பாபு, ம.சுந்தர், ஜே.எம். குமரன், ச.முத்துக்குமார் அரவிந்தன், பாலாஜி, எஸ். சேதுபதி, கே. சரவணன், என். தன்ராஜ், பகவதி அம்மாள், ஈ.பூங்கொடி, எஸ். தேவி சுசீலா, சாமுண்டீஸ்வரி, எஸ்.ஜோயல், எஸ். வீரசந்திரன், பா.அஜித், ஜி. கணேஷ், எஸ். வினோத், வி.பரமசிவம், புண்ணியமூர்த்தி, ஆர்.மதன்குமார், சி. சேகர், பி.எம். ஹரி ரவிக்குமார்,காஜா சுரேஷ், ஆர்.காம்ப்ளி டி.கார்த்திகேயன், அ.குணசேகரன் போஸ் வினோத், ச.வருண் குமார் வசந்தி,வனிதா, பத்மா, ச.தருண்குமார், ஜெ. மாரிமுத்து, ஜெ. விக்னேஷ் டி.தினேஷ், வி.சி. பிரபாகரன், வி.தேசப்பன் சே யுவராஜ்.எஸ். சதீஷ், பி.யோகித்,எஸ். கே. கோகுல், சேகர்,முரசொலி குமரேசன், ஆர். லோகு, மாதேஷ், பி. ராஜா, எஸ். கௌதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி. ஏற்பாட்டில்

# 99வது வார்டில் 300 மாநகராட்சி ஊழியர்களுக்கு நல உதவிகள்!

சென்னை, அக்.17- முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தின்படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதலின்படி,

எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு ஆலோசனைப்படி, கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி ஏற்பாட்டில், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டில் பணியாற்றும் மாநகராட்சி அதிகாரிகள், கோட்ட பொறியாளர், துப்புரவு மேற்பார்வையாளர்,

துப்புரவு ஆய்வாளர், மின்துறை பொறியாளர், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர், சுகாதார ஆய்வாளர், வரி வசூலர், மற்றும் 300 மாநகராட்சி பணியாளர்கள், சாலை பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பணியாளர்கள், சுகாதாரத்துறை பணியாளர்கள், மின்துறை பணியாளர்களுக்கு, புரசைவாக்கம் தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில், பட்டாசு, இனிப்பு, மற்றும் ரொக்க பணம் வழங்கப்பட்டது,

உடன் 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே சிவகுமார், துப்புரவு மேற்பார்வையாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் டி.தினகரன், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் கே. சுரேஷ், மின்துறை பொறியாளர் கே. கந்தன், சுகாதார ஆய்வாளர் கே. கவியரசன், வரிவசூலர் சி. சந்திரசேகர், மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டு தீபாவளி பரிசு பெற்றுக் கொண்டனர்.

### ச.பரமசிவம் தலைமை! சேரன் – அன்பழகன் – ராணி ரவிச்சந்திரன் முன்னிலை!

# அண்ணாநகர் வடக்கு 102 (அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் அறிக்கை!

சென்னை, அக்.17- சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி, 102 (அ) வது வட்ட கழகச் செயலாளர் எம்.ஜி. ரவிக்குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி 102 (அ) வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (17.10.2025, வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஆலோசனையின்படியும், அண்ணா நகர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ச.பரமசிவம் தலைமையிலும், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் உத்தரவின்படியும், 102 (அ) வட்டப் பாக தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேரன், மாவட்ட வழக்கறிஞர் அணி உறுப்பினர் அன்பழகன், 102வது வட்ட மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையி லும் தேர்தல் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

எனவே 102 (அ) வட்டத்திற்குட்பட்ட தொகுதி நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA2 பாக முகவர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகிய அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.




## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். இராகவானந்தம்**

**அக்டோபர் 17 (1999)**



**திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.**

**தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**